பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 10 சனிக்கிழமை (24.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 117

# புலிகளின் பிரதேசத்திற்குள் படையினர் முன்நகர்வு

# பெரியதம்பனையில் கடும் மோதல் தொடர்கிறது

## 10 ஆயிரம் மக்கள் மடு தேவாலயத்தில் தஞ்சம்

வவுனியா,மார்ச்24

**வவுனியா - மன்னார் எல்லையில், மடுவிலிருந்து சுமார் 25 கி.மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான பெரியதம்பனையில் - இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. இரவுவரை மோதல்கள் தொடர்ந்து நடைபெறுவதாக பிந்திய செய்திகள் தெரிவித்தன.**

***இராணுவத்தினரின் முன்நகர்வைத் தொடர்ந்து கடும் மோதல்கள் வெடித்தன. அதனால், சுமார் பத்தாயிரம் மக்கள் மடு தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.***

மன்னார் - வவுனியா எல்லைப் பிரதேசமான இரணைஇலுப்பக்குளம், பிரமணாளங்குளம் ஆகிய இராணுவ நிலைகளில் இருந்தே படையினர், புலிகளின் பிரதேசத்துக்குள் நுழைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரமணாளங்குளத்தில் சுமார் 3 கிலோ மீற்றர்தூரத்தில் உள்ளபெரியதம்பனைப்பகுதிக்கு முன்னேறியுள்ள இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில்கடும் மோதல்கள் தொடர்ந்து (இச்செய்தி எழுதப்படும் போது) இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

பிரமணாளங்குளம் - மடு வீதியில் நேற்றுக் காலை படையினர் முன்நகர்ந்ததைத் தொடர்ந்து தமது தரப் பிலிருந்து தொடர் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை செறிவான ஆட்லறி மற்றும் பல்குழல் ஷெல் தாக்குலை நடத்தியவாறு மன்னார் பிரமணாளங்குளம் - மடு வீதியில் படையினர் முன்நகர்வை நடத்தியதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

படையினரின் ஷெல்கள் பெரிய பண்டிவிரிச்சான், மடுத்தேவாலயம் அருகாமைவரை வீழ்ந்து வெடிக்கின்றன என்றும் மக்கள் நேற்றுமாலைவரை இடம்பெயர்ந்தனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மோதல்கள் காரணமாக அந்தப் பகுதிகளைச் சூழவசித்த 10ஆயிரம் பொதுமக்கள் அருகில் உள்ள மடுதேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களை மன்னார் ஆயர் அதிவண ராயப்பு ஜோசப் சென்று பார்வையிட்டார்.

இதற்கிடையில்-

(04ஆம் பக்கம் பார்க்க)

## எமது எல்லையை இராணுவம் தாண்டியிருக்கிறது; பாரதூரமான இவ்விடயம் குறித்துத் தலைமை தீவிர பரிசீலனை

### - புலிகளின் பேச்சாளர் இளந்திரையன்

கொழும்பு, மார்ச்24

இராணுவம் தனது எல்லைக் கோட்டை தாண்டி எங்களது பிரதேசத்துக்குள் பிரவேசித்திருப்பது பாரதூரமான விடயம். இந்த நிலைமை குறித்து எமது தலைமைப் பீடம் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது - என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திைரயன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பாக தொலைபேசி மூலம் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

படையினரின் நடவடிக்கையின்போது பெரியதம்பனைக் கிராமத்தில் 120 பொதுமக்கள் சிக்கியுள்ளனர். படையினர் அவர்களை மனித கேடயமாக வைத்திருக்கிறார்கள்.

இது மோசமான கள நிலைவரமாகும். இது தொடர்பாக எமது மத்தியகுழு தீவிர

(04ஆம் பக்கம் பார்க்க)

## மனித கேடயங்களாக 120 தமிழ்ப் பொதுமக்கள்?

வவுனியா, மார்ச்24

பெரியதம்பனைப் பகுதிக்குள் நேற்றுக்காலை 7.30 மணிக்கு முன்நகர்ந்த படையினர், 120 தமிழ்ப் பொதுமக்களைக் கேடயமாகப் பிடித்து வைத்திருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாங்கள் முன்னேறும் பகுதிகளில் பொதுமக்களைக் கேடயங்களாக்கி தம் மீதான தாக்குதலைத் தவிர்ப்பதற்காகப் படையினர் இவ்வாறு செய்வது வழக்கமாகிவிட்டது என்றும் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தாங்கள் எவரையும் மனித கேடயங்களாகப் பிடித்து வைத்திருக்கவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறினார்.

பாதுகாப்புப் படையினரால் எவரும் மனிதகேடயங்களாகப்பிடிக்கப்படவில்லை. பாதுகாப்புப் படையினர் எச்சந்தர்ப்பத்திலும் பொதுமக்களைப் பிடிப்பதுகிடையாது.

வாகரையைப் போன்று புலிகளால் இந்தப் பகுதிகளிலும் பொதுமக்கள் மனித கேடயமாகப் பயன்படுத்தப்படலாம் என்ற காரணத்தால், அந்த அச்சத்தால், அங்கிருந்து பொதுமக்கள் வெளியே வரவேண்டும் என்றுபாதுகாப்புப் படையினர்விரும்புகின்றனர் - என்றார் பிரசாத் சமரசிங்க. (அ-1)

## மடு பெரியபண்டிவிரிச்சான் பிரதேசம் மீது நேற்று அகோர பல்குழல் எறிகணை வீச்சு!

### கூட்டுறவு ஊழியர் பலி! மக்கள் இடம்பெயர்ந்து ஓட்டம்!

கொழும்பு, மார்ச் 24

மன்னார் மடு பிரதேசத்தில் பெரியபண்டிவிரிச்சான் பகுதிமீது அரசுப்படைகள் நேற்று கடும் ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

வியாழக்கிழமை நள்ளிரவு ஆரம்பித்த அகோர ஷெல் வீச்சு நேற்றுப் பகல் நேரத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டதாக அங்கிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

மடு தேவாலயத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் கிழக்கே அமைந்துள்ள பெரியபண்டி விரிச்சான் கிராமம் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்புக்கருதி வீடு வாசல்களை விட்டு ஓடியிருக்கிறார்கள்.

பதற்றம், பீதிக்கு மத்தியில் எங்கே இடம்பெயர்ந்து செல்வது என்று தெரியாத நிலையில் பொதுமக்கள் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

(04ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. படைநகர்வு முறியடிப்பு புலிகளின் தரப்பில் அறிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் நோக்கி, நேற்றுப்படையினர்மேற்கொண்ட முன்நகர்வை தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12 மணிமுதல் அரச படையினர் வவுணதீவுப் பகுதியிலிருந்தும், உன்னிச்சைப் பகுதியிலிருந்தும் இரு முனைகளில் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டனர் என்றும், படையினரின் இந்த முன்நகர்வைத் தாம் முறியடித்துள்ளனர் என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, படையினருக்கு இதில் பாரிய இழப்புகள் ஏற்பட்டிருக்கும் என அவர்கள் தெரிவித்தனர் என்று சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்துள்ளது.

**ஆயர் விஜயம்**

இதேவேளை, மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இக்குழுவில் அரச சார்பற்ற

(04ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தமாதம் முற்பகுதியில் ஜனாதிபதி புதுடில்லி விஜயம் 'சார்க்' உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்கு

கொழும்பு, மார்ச் 24

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு (சார்க் மாநாடு) இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இம்மாத இறுதியில் ஆரம்பித்து அடுத்தமாதம் முதல் வாரம் வரைநடைபெறவிருக்கின்றது. அதில் பங்கு கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்தமாத முற்பகுதியில் புதுடில்லிக்கு விஜயம் செய்யக்கூடும்என விடயமறிந்தவட்டாரங்கள்தகவல் வெளியிட்டன.

சார்க் வெளியுறவுச் செயலர்கள் மட்டக் கூட்டம் இம்மாதம் 30, 31ஆம் திகதிகளிலும், சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டக் கூட்டம் ஏப்ரல் 1, 2ஆம் திகதிகளிலும், சார்க் நாடுகளின்தலைவர்கள் பங்குபற்றும் உச்சிமாநாடு ஏப்ரல் 3, 4 ஆம் திகதிகளிலும் புதுடில்லியில் நடைபெறவிருக்கின்றன.

இந்த மாநாடு தொடர்பான ஆயத்தப் பணிகளில் ஈடுபடுவதற்காகக் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலொக் பிரசாத் புதுடில்லி சென்றுள்ளார். (சி)

## கடத்தப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 24

கடத்தப்பட்டவர்களையும் காணாமற் போனவர்களையும் தேடிக் கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தி கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

காணாமற்போனோரைத் தேடிக்கண்டறியும் குழு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு ஹைட்பார்க்கில் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெறும்.

ஆட்கள்கடத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக 435 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா அண்மையில் விடுத்த அதிர்ச்சித் தகவலினால் கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் குழப்பமடைந்துள்ளனர். கைதுகள், கடத்தல்கள் என்பன தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. மனித உரிமைகள் மிலேச்சத்தனமாக மீறப்படும் சூழ்நிலை உருவாக்கப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டையில் வெடிபொருட்கள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 24

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைப் பகுதியில் பெருமளவிலான ஆயுதங்களை படையினர் மீட்டுள்ளனர் என தேசியப் பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கின்றது.

பொதுமகன் ஒருவர்வழங்கிய தகவலை

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஏ- 9 போக்குவரத்து ஓமந்தையில் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 24

ஏ - 9கண்டி வீதியில், வவுனியா ஓமந்தையில் உள்ள வீதிச் சோதனை நுழைவாயில் நேற்று மூடப்பட்டது.

நேற்றுக்காலை தொடக்கம்வவுனியா வடக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற தீவிர ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து முற்பகல் 10.45 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடியை இராணுவத்தினர் மூடினர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலய பொதுக்கூட்ட அறிவித்தல்

அன்புடையீர்,

மேற்படி ஆலய நிலைமையினை ஆராய்ந்து நித்திய பூசை, அலங்கார உற்சவம் போன்றவற்றை மீள ஆரம்பிப்பது பற்றி அடியவர் களின் கருத்துக்களை அறிவதற்கான கூட்டம் நாளை (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து அடியவர்களையும் தவறாது சமூகம் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(58984) - ஆலய பரிபாலன சபையினர்.



அளவெட்டி வடக்கு, தவளக்கிரி

## முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் பரிபாலனசபை/நிர்வாக சபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு பொதுச்சபை அங்கத்தவர்களது கூட்ட மொன்று எதிர்வரும் பங்குனி மாதம் 25ஆம் திகதி (08.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் சபைத்தலைவர் க.சின்னத்தம்பி அவர்களது தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற அம்பாள் அருள்பாலித்துள்ளார்.

அத்தருணம் சகல பொதுச்சபை அங்கத்தவர்களும் கூட்டத்திற்குத் தவறாது பங்குபற்றி புதிய நிர்வாகமொன்றினைத் தெரிவுசெய்ய ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இது ஒரு முக்கிய கூட்டமென்பதால் தவறாது சமுகமளிக்கவும்.

தவளக்கிரி. (58934) பரிபாலன/நிர்வாக சபையினர்.

## வேலையாள்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள

**எலிம் சிறுவர் இல்லத்திற்கு**

பின்வரும்வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

**ஆண்பிள்ளைகள் பராமரிப்பாளர் - ஆண் (35 - 50 வயது)**

**தோட்ட வேலையாள் - ஆண் (35-50 வயது)**

**குறிப்பு:-**

விண்ணப்பதாரர் சுயவிவரக் கோவையுடன், உறவினரல்லா அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் இருவரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் 10.04.2007 ஆம் திகதிக்கு முன் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். நேரடியாகக் கொடுக்கப்படும் எந்த விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

நிர்வாகி,
எலிம் சிறுவர் இல்லம்,
(58981) மெமோறியல் ஒழுங்கை,மானிப்பாய்.

## 31ஆம் நாள் நினைவுகள்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1949 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கிலம் போதித்து தற்போது வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் உள்ள பலரின் அறிவு விசாலமடைய வழிவகுத்த



திருமதி

**இராஜலக்சுமி சபாநாயகம்**

அவர்களின் மறைவின் 31 ஆம் நாளாகிய இன்று(24.03.2007) சனிக்கிழமை பழைய நினைவுகளை இரை மீட்பதோடு அவரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

(சி/50825) - பழைய மாணவர்.

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**மு.இராசரத்தினம்**

(முன்னாள் செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி)



தாயின் மடியில் 12-10-1935 — ஆண்டவன் அடியில் 01-04-1994

திதி: 24.03.2007

ஆண்டுகள் பதின்மூன்று சென்றாலும்
எம் உள்ளத்தில் வீற்றிருக்கும்
அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.இராசேந்திரன்
'அன்பகம்'
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. (58000)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கில் இரண்டு காணிகள் மற்றும் வான், கன்டர் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773155449

## விற்பனைக்கு

Chaly (Lancer model) மோட்டார் சைக்கிள், DVD-CD பிளேயர், பேபி தொட்டில்(Cot), மேசை, கதிரைகள் மற்றும் பொருள்கள் விற்பனைக்குண்டு.

417, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9813

## உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள 37XXXX தொடரிலக்கமுடைய மசிபேக்குஸன் -240 ரக உழவு இயந்திரமும் பெட்டியும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777061483

## வெளிவந்துவிட்டது

தரம் 10 இற்கான
உயிரியல் (விஞ்ஞானம்)
2007இல் இருந்து புதிய பாடத்திட்டம்
வெளியீடு
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


COMPUTER EXPRESS

Jaffna Head office — Branch office No 167, Jaffna.

**Diploma in Hardware Engineering**

Assembling ◆ Upgrading ◆ Troubleshooting ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Software Installation ◆ Configuring ◆ Networking Etc..

Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

**Diploma in Video Mixing**

Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Adobe Premier ◆ Cool3D Studio ◆ Pinnacle Studio ◆ VCD Cutter

Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**

Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Corel Draw ◆ Cool3D Studio ◆ Macromedia Flash MX

Course Fee :2000/=


ஒரே நாளில் ஆரம்பம்:- 26/03/2007- 09.00

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

Batch I : 23/03/2007, BatchII : 24/03/2007
BatchIII: 25/03/2007, Batch IV :28/03/2007

3 மாதகால
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 24/03/2007, 25/03/2007, 26/03/2007 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.


## கண்ணீர் அஞ்சலி



**Rtn.சின்னத்துரை கனகரத்தினம்**

(சிரேஷ்ட சட்டத்தரணி , J.P.U.M)

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய க.கேசவன் (J.P.U.M, சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்) அவர்களின் அன்புத் தந்தையின் பிரிவிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை,
வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க
மகா கணபதி கோயில்,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர்

**தில்லையம்பலவாணர் சம்பந்தன்**

(அன்னை நாகா பூட் சிற்றி, யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
அன்னை நாகா பூட் சிற்றி,
175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் விஷேட அறிவித்தல்

### அபிஷேகங்கள், சாந்திகள் செய்தல்

மேற்படி ஆலயத்தில் அபிஷேகங்கள், சாந்திகள் செய்வது தவிர்க்கமுடியாத காரணங்களால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக கடந்த 14.09.2006ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி இருந்தோம். இதனால் அடியார்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக ஆலய நிர்வாகம் தனது வருத்தத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றது.

எதிர்வரும் 01.04.2007 பங்குனி உத்தர தினத்திலிருந்து மீண்டும் அபிஷேகங்கள், சாந்திகள் செய்யவுள்ளோம் என்பதை அனைவரினதும் மேலான கவனத்திற்காக ஆலய நிர்வாகத்தின் சார்பில் இத்தால் விளம்பரப்படுத்திக் கொள்கின்றேன். இடைநிறுத்தம் செய்வதற்கு முன்பதாக பணம் செலுத்தியும் அபிஷேகங்கள், சாந்திகள் செய்யப்படாமல் இருப்போர் அவற்றைச் செய்வதற்குத் தாம் விரும்பும் ஒரு திகதியை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். ஏனையோர் எம்முடன் தொடர்புகொண்டு மீண்டும் முன்பதிவினைச் செய்துகொள்ளல் வேண்டும். முன்பதிவு செய்துகொள்ளாமல் அபிஷேகங்கள், சாந்திகள் செய்வது சாத்தியமற்றது. அபிஷேகத்தைப் பதிவு செய்துள்ள ஒருவர் எதுவித முன்னறிவித்தலும் கொடுக்காமல் அபிஷேகத் தினத்தன்று வருகை தரத்தவறின் அந்த அபிஷேகம் அன்றைய தினமே ஆலயத்தினால் செய்விக்கப்பட்டு உரிய முகவரிக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். முற்பதிவு செய்துகொள்ளும்போதே அபிஷேகங்கள், சாந்திகளுக்கான கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும்.

### பட்டுச்சேலைகள் பகிரங்க விற்பனை

மேற்படி ஆலயத்தில் அம்பாளுக்கு அடியார்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பட்டுச் சேலைகள்(சாறிகள்) எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 01.04.2007 ஆம் திகதி தொடக்கம் ஆலய கல்யாண மண்டபத்தில் சகாய விலையில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும். பெற்றுக்கொள்ள விரும்புவோர் தினசரி முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பட்டுச் சேலையைத் தேர்ந்தெடுப்பவர்கள் அன்றைய தினமே உரிய பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று பொருளையும் எடுத்துச்செல்லல் வேண்டும்.

### முக்கிய அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரால் சிலர் பணம் வசூலித்து வருவதாகவும் பொருள்கள் சேகரித்து வருவதாகவும் எமது கவனத்திற்குப் பல தடவைகள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி வசூல் செய்வதற்கோ பொருள்கள் சேகரிப்பதற்கோ ஆலய நிர்வாகம் எந்தவொரு நபருக்கும் அனுமதியளிக்கவில்லை என்பதையும் இக்கோவிலின் பெயரால் பணமோ பொருள்களோ எந்தவொரு காலத்திலும் மக்களிடம் சென்று அறவிடும் வழமை இல்லை என்பதையும் அனைவருக்கும் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம். இவ்விடயத்தில் மிகவும் தெளிவாக இருக்குமாறும் எச்சந்தர்ப்பத்திலும் போலி வேடதாரிகளால் ஏமாற்றப்படுவதற்கு சிறிதேனும் இடமளிக்க வேண்டாம் எனவும் அடியார்களாகிய உங்கள் அனைவரையும் மேற்படி ஆலயத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆலய விடயங்கள் தொடர்பாக ஏதாவது விவரங்களைப் பெற விரும்பினால் 0602213024 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஆலய நிர்வாகப் பணிமனையில் போதிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவும். அன்னையின் அருளாசிகள் அனைவருக்கும் இனிதே கிடைப்பதாக.

நன்றியுடனும் பணிவுடனும்

அன்னையின் பணியில்
நா.யோகநாதன்,
நிறைவேற்று அலுவலர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
திருமதி ஜெயந்தி பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தந்தை

**தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம்**

அவர்கள் 20.03.2007அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி (56978)

## மரண அறிவித்தல்

### துரையப்பா பிரான்சீஸ் மைக்கல்



(சித்திரக்கலைஞர், ஞானசிருஷ்டி வைத்தியர், மைக்கா றேடியோ, படம் பிறேமிங் தொழிலக உரிமையாளர், கிளாலி புனித வியாகுல மாதா செபக்கூட நிறுவுநர்)

'துரையப்பா இல்லம்', இல27(11),கோயில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இல. 99/8, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்டவருமான துரையப்பா பிரான்சீஸ் மைக்கல் 20.03.2007 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கலைஞர் (Artist & Block maker) சொலமன் பிரான்சீஸ் துரையப்பா - றோசலீன் தம்பதியரின் மூத்த அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை எலிசபெத்து மற்றும் திருமதி எற்வேட் திரேசம்மா, பிரான்சீஸ் சென்றோச்(துரை ஆரோக்கியதாசன்), திருமதி அருள்நாயகம் பிலோமினா, திருமதி சீவரத்தினம் பார்பறா, அருட்சகோதரி மேரி மக்டலீன் பிரான்ஸீஸ் RGS(St. Bridget's convent, Colombo-07) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருமதி மைக்கல் செபமாலையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மைக்கல் மேரி றெயினா சரோயினிதேவி, மைக்கல் அருள்நேசன்(Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அருள்நேசன் இராசாத்தியின் மாமனும் ஜெபநேசன், மயூரி ஆகியோரின் பேரனும் திருமதி வரப்பிரகாசம் லூர்த்தம்மாவின் மைத்துனரும் காலஞ்சென்ற கி.மி.சூசைப்பிள்ளை - முத்து தம்பதியரின் (கிளாலி) பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(24.03.2007) சனிக்கிழமை காலை 8 மணிக்கு 'துரையப்பா இல்லத்தில்' இறுதி ஆராதனைக்கு வைக்கப்பட்டு முற்பகல் 10 மணிக்கு யாழ். சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன்பின் யாழ். மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், வியாகுலமாதா ஊழியரின் பக்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''அமரர் மைக்கல் சமாதான ஒளியில் ஒளிர்வதாக''*

*'துரையப்பா இல்லம்'*
*இல. 27(11), கோயில் வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (சி/50850)

தகவல்:
**துரை ஆரோக்கியதாசன்**
(சகோதரர் - முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களை நியமிக்க அரசுத் தரப்பு தயாரா?

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை ஆட்கடத்தலும், காணாமற் போதலும், அச்சுறுத்தியும் கடத்தியும் கப்பம் அறவிடலும் மிக மோசமான வன்முறைகளாக - மனித உரிமை மீறல்களாக - இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன.

அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் இவை சர்வ சாதாரணமாக அரங்கேறி வருகின்றன. சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டியவர்கள் இந்த அராஜகங்கள் குறித்து பாராமுகமாக இருக்கின்றார்கள் என்பதற்கு அப்பால், அவர்களே இவற்றுக்குத் துணை போகின்றனரோ என்ற ஆதங்கம் - விசனம் - பெரும் சந்தேகம் - தமிழர்களுக்கு. இந்த மோசமான கொடூரங்கள் நிகழும் போக்கைப் பார்க்கும்போதும், அவை பற்றிக் கிடைக்கும் தகவல்களை அறியும்போதும் அத்தகைய எண்ணமே தமிழர்கள் மனதில் மேலோங்குகின்றன.

இவை சர்வதேச சமூகத்தின் கவனத்தை அதிகளவில் ஈர்த்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரங்கேறும் இந்த அட்டூழியங்களை அரசுத் தலைமை நினைத்தால் ஒரு சில மணி நேரத்திலேயே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். 'மனமுண்டானால்தான் இடமுண்டு' என்பதே இவ்விடயத்தில் உள்ள பிரச்சினை - பின்னடைவுக்குக் காரணம் - என்பதை இப்பத்தியிலேயே ஏலவே பல தடவைகள் சுட்டிக்காட்டியாகி விட்டது.

ஆனாலும், இந்தக் கொடூரங்களை - குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் இந்த அவலங்களை - தடுத்து நிறுத்துவதற்கான உறுதிப்பாடும் திடசங்கற்பமும் அரசுத் தலைமைக்கு இல்லை என்பதே தமிழர்களின் குற்றச்சாட்டு; மனக்குறை.

எனினும், அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவோ இந்த விடயம் குறித்து வேறு விதமாகக் கருத்து வெளியிடுகின்றார்.

''சர்வதேசத்தின் முன்னால் இலங்கையை ஒரு வியாதி பீடித்த நாடாகக் காட்டும் நோக்கோடு ஆட்கடத்தல்கள், காணாமற்போதல் போன்றவை குறித்து பெரிதுபடுத்திப் பிரசாரப்படுத்தாதீர்கள். ஆதாரங்கள் இல்லாத குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவதூறு படுத்தாதீர்கள்!'' - என்று கூறுகின்றார் அரசுத் தலைவர்.

அவரது இந்த ஆலோசனை தொடர்பாக இரண்டு முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதும் கட்டாயமானதுமாகும்.

முதலாவது - ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது தவறானதே. ஏற்றுக்கொள்ள முடியாததுதான். ஆனால் தவறுகள், அத்துமீறல்கள், அராஜகங்கள் மேற்கொள்வதற்கு வசதியாக - ஆதாரங்கள், சாட்சியங்கள், ஆவணங்கள், சான்றுகள் முன்வைக்கப்பட முடியாத நிலையை உருவாக்கி வைத்துக்கொண்டு - அந்த வாய்ப்பின் கீழ் அராஜகங்கள் தொடரப்படுமானால் அவற்றை என்ன செய்வது?

உதாரணத்திற்கு தற்போது தலைநகரிலும் அரசுப்படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் தாயகத்திலும் சர்வ சாதாரணமாக நிகழும் ஆட்கடத்தல்களுக்கு, நேரடியாக இன்னார்தான் காரணம் எனச் சுட்டிக்காட்டுவதற்கு ஆதாரங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அச்சுறுத்திக் கப்பம் பெறும் அராஜகவாதிகள் குழுவின் தொலைபேசி இலக்கங்கள் வரை துப்புகள், தகவல்கள் கொடுக்கப்பட்டும் பாதுகாப்புத்தரப்பு எந்த ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுத்ததாக நம்பகத் தகவல்கள் எவையும் இல்லை. அப்படியிருக்க, இந்த ஆட்கடத்தலும் கப்பம் கோரலும் சர்வ சாதாரணமாக நடக்க - அவற்றின் சூத்திரதாரிகளைப் பிடித்து, அம்பலப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பொதுமக்களிடம் இல்லை என்பதற்காக அந்த அராஜகங்களை மக்களும் ஊடகங்களும் அம்பலப்படுத்தாமல், அமுக்கி வாசித்து, நாட்டுக்கு சர்வதேச ரீதியில் நற்பெயரும் கீர்த்தியும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா?

அடுத்தது - ஜனாதிபதி குறிப்பிடும் இந்த ஆட்கடத்தல், காணாமற் போதல் பற்றிய சர்ச்சை குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் பிரதம கொரடாவே நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருக்கின்றார். இந்த ஆட்கடத்தல்களின் மூலம் தலா ஐம்பது லட்சம் ரூபாவிலிருந்து ஒரு கோடி ரூபா வரை கப்பம் அறவிடும் அராஜகத்தின் பின்ணியில் தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் முக்கிய புள்ளிகளைத் தங்களுக்குத் தெரியும் என்று அவர் கூறுகிறார். சிறப்புரிமைப்பிரச்சினை காரணமாக அப்பெயர்களை அம்பலப்படுத்த முடியாமல் இருப்பதாகக் குறிப்பிடும் அவர், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்தால் அதற்கு முன்னால் இந்த விடயங்களையும் விவரங்களையும் அம்பலப்படுத்திப் பகிரங்கப்படுத்தலாம் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

அதேசமயம், ஜனாதிபதி மஹிந்தர் மற்றும் அவரது சகோதரர் குழுவின் அத்துமீறிய செயற்பாடுகளைப் பகிரங்கமாக விமர்சித்து, குற்றம் சுமத்திவரும் ஸ்ரீல.சுகவின் அதிருப்திக் குழுவினரான முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோரும் அந்த விவகாரங்கள் குறித்து விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும்படி கோருகின்றனர்.

ஆக, ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டாம் எனக் கூறும் ஜனாதிபதி தரப்பைப் பார்த்து, நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களை நியமியுங்கள், ஆதாரங்கள், சான்றுகள் போன்றவற்றை முன்வைக்கிறோம் என்கிறார்கள் எதிர்த்தரப்பில் உள்ளவர்கள்.

சபாஷ். சரியான போட்டி!

தெரிவுக்குழுக்களை அமைத்து, ஆதாரங்களை முன்வைக்க இடமளித்து, இந்த விவகாரங்களில் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள ஜனாதிபதித் தரப்புத் தயாரா?

நாட்டு மக்களுக்குப் பதில் தேவை.

## மூவரைக் காணவில்லை என ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச்24

குடாநாட்டில் மூவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், பாங்சல் வீதியைச் சேர்ந்த நிர்மலநாதன் மயூரன் (வயது 19) என்பவர் அருகில் உள்ள வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர். இவர் தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கிறார். அத்துடன், மரியன்னை போராலயத்தில் பலிபீட உதவியாளராகவும் பணியாற்றுகிறார்.

வண்ணார்பண்ணை, வயல்கார ஒழுங்கையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான மாசிலாமணி அஜந்தன் (வயது 24) என்பவர் வியாழக்கிழமை ஊரடங்கு வேளையான இரவு 9.45 மணியளவில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத அயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.

அவரது அயல்வீட்டில் வசிக்கும் வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலய மாணவனான விக்னேஸ்வரன் கிரிசாந்தன் (வயது 16) என்பவரும் அதே நேரம் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தக் கடத்தல் சம்பவங்கள் குறித்து அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ-1-4-86-202)

## மிருசுவிலில் சுடப்பட்டு சிகிச்சை பெற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கடந்த 17ஆம் திகதி மிருசுவில் வடக்கில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டு படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர் வியாழக்கிழமை இரவு மரணமானார்.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சி.மெய்கண்டதேவர் (வயது -48) என்பவரே சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தவராவார். (1-4-202-68)

## நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றத்தின் அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபத்தில் நூல் வெளியீடும் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் எஸ்.ஏ.ஆனோல்ட் எழுதிய ''யாழ். கிறிஸ்தவ பாரம்பரியத்தில் அமெரிக்க மிசனரியின் பணிகள்'' எனும் நூல் வெளியீடு இடம்பெறும்.

முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதி.வண. பேராயர் கலாநிதி டி.எஸ். தியாகராசா ஆகியோர் ஆசியுரையினை வழங்குவர்.

ஆய்வு மன்றத்தின் இயக்குநர் வண.ஜி.நடராஜா ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பினை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாஅமெரிக்க மிசனரிமாரின் பங்களிப்பு என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார். (1-95)

### நாளை

பங்குனி - 11
ஞாயிற்றுக்கிழமை
25.03.2007
திதி: சப்தமி
முன்னிரவு : 06.22
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முன்னிரவு : 10.00
சுபநேரம் : 09.15 - 10.45
ராகுகாலம் : 04.45 - 06.15

## கடந்த இரண்டு நாள்களில் குடாநாட்டில் 4 பேர் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களில் நால்வர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கோண்டாவில், பொம்மைவெளி, புத்தூர், வரணி ஆகிய இடங்களில் மேற்படிக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை பொம்மைவெளிப் பகுதியில் இருந்து சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

அராலி வீதி, பொம்மைவெளியைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் விஜயதாஸ் (வயது-27) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இவர் நேற்றுக் காலை வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு விசாரணைகளை மேற்கொண்டார். அதன் பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கோண்டாவில் அன்னுங்கைப் பகுதியில் இருந்து வெட்டுக்காயங்களுடன் தீயிட்டு எரிக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த அரசலிங்கம் றொபின்சன் (வயது-18) என்பவரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக கோப்பாய்ப் பொலீஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

புத்தூர் நிலாவரைக் கேணியடியில் இருந்து நேற்றுக் காலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த குமாரசாமி சரவணபவான் (வயது-54) என்பவரே என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை முற்பகலில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றவர் அன்றைய தினம் பிற்பகல் சடலமாக நிலாவரைக் கேணியில் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காகக் கோப்பாய் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

வரணி, குடமியன் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 6.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேஇடத்தைச் சேர்ந்த தர்மரட்ணம் உதயசங்கர் (வயது -19) என்பரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.வீட்டுக்கு அண்மையில் உள்ள மைதானம் ஒன்றில் விளையாடிவிட்டு வீடு திரும்பிய போது வீட்டு வாசலில் வைத்து அவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-1-8-4--15-68-202)

## விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, மார்ச் 24

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களில் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்களுக்கு விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காதோர் போட்டோப் பிரதி செய்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என உதவிப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

மேலதிக விவரங்களுக்கு 011 2785216 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தை அலுவலக நேரத்தில் 'உதயன்' பணிமனையில் பார்வையிடலாம். (அ-11-202)

## இலக்கியவிழா போட்டிகள்

கரவெட்டி,மார்ச் 24

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு வருடாந்தம் நடத்தும் தேசிய இலக்கியக் கலைப் பெருவிழா கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவையொட்டி பாடசாலை மாணவர்கள், பிரதேச படைப்பாளர்கள் ஆகியோருக்கான கட்டுரை, சிறுகதை, கவிதை போன்ற போட்டிகளும் நடத்தப்படவிருக்கின்றன என பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-203-70)

## மகளிர் தினவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை மாவட்ட மகளிர் குழு நடத்தும் அனைத்துலகப் பெண்கள் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் [illegible] மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (1-203)

## திருப்பாடுகள் காட்சி 5 நாள்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச்24

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் ஆண்டுதோறும் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இம்முறையும் ''மலையில் வீழ்ந்த துளிகள்'' என்னும் பெயரில் மேடையேற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் ஏப்பரல் மாதம் 1ஆம் திகதி வரை மன்ற அரங்கில் இந்தக் காட்சி மேடையேற்றப்படவுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இரவு வேளையில் மேடையேற்றப்பட்டு வந்த இந்தத் திருப்பாடுகளின் காட்சி தற்போதைய சூழ்நிலை காரணமாக வழமைக்கு மாறாக பிற்பகல் 3.45மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை காட்சிகளுக்கான அனுமதிகள் இலவசமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான இலவச அனுமதிச் சீட்டுகளை முன் கூட்டியே திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ-8)

## சுழிபுரத்தில் தேடுதல்

சங்கானை, மார்ச் 24

சுழிபுரம் பிரதேசத்தின் பல பகுதிகளில் நேற்றுக் காலை 5.மணி தொடக்கம் பிற்பகல் வரை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர். (அ-1-29)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரசுவாமி பத்திரகாளி ஆலய பெரும் திருவிழா வியாழனன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பங்குனி உத்தர நாளான அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

* * *

மாதகல் பாணாவெட்டி புவனேஸ்வரி அம்பாள் ஆலய பெரும் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 31ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் இடம் பெறவுள்ளன.

* * *

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

எதிர் வரும் 31ஆம் திகதி இலட்ச அர்ச்சனை நிறைவடைந்து முதலாம் திகதி பங்குனி உத்தர சங்காபிஷேகம் மறுநாள் பௌர்ணமி திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளன.

* * *

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய வருடாந்த பங்குனி பெரும் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 31ஆம் திகதி பஞ்சரத பவனியும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

* * *

ஏழாலை மத்தி பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் விசேட பூசைகள் இடம்பெற்று எதிர்வரும் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் குளிர்த்திப் பூசையும் இடம் பெறவுள்ளன.

* * *

வண்ணை காளியம்பாள் ஆலய திருக்குளிர்ச்சி எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

* * *

இந்து சமயப் பேரவையின் தலைமையகம் அமைந்துள்ள கந்தர்மடம் சிவகாம சுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமாள் கும்பாபிஷேகம் ஏப்ரல் முதலாம் திகதி இடம் பெறவுள்ளது. (அ-203)

### ICC Cricket World Cup West Indies 2007 — உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2007

## நெதர்லாந்து, நியூசிலாந்து ஆறுதல் வெற்றி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் நெதர்லாந்து, நியூசிலாந்து அணிகள் வெற்றிபெற்றன.

நெதர்லாந்து - ஸ்கொட்லாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாண்ட் அணி 34.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

137 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 23.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் நியூசிலாந்து அணி கனடா அணியை 114 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 363 ஓட்டங்களைப் பெற்றது.

இது நியூஸிலாந்து அணி உலகக் கிண்ணப் போட்டிகளில் பெற்றுக்கொண்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

வின்சன் 101 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. டேவிசன் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

**இன்றைய ஆட்டங்கள்**

- ஆஸ்திரேலியா எதிர் தென்னாபிரிக்கா
- இங்கிலாந்து எதிர் கென்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் பிரதேசத்திற்குள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணை இலுப்பங்குளம் 3கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விளாத்திக்குளம் கிராமத்துக்கு நேற்று முன்தினம் முன்னே றிய இராணுவத்தினர் அங்கிருந்து 13 குடும்பங்களை சேர்ந்தவர்களை வவுனியாவுக்கு நேற்று முன்தினம் அழைத்து வந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஓமந்தைக்கு மேற்கேயுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளால் நடத்தப்படுகின்ற ஷெல் தாக்குதல்களை தடுக்கும் வகையி லேயே இராணுவத்தினர் அங்கு தாக்குதல் களை நடத்துவதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித் தார்.

இந்த மோதல்களில் புலிகள் தரப்பில் 20பேர் கொல்லப்பட்ட னர். எமது தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர்.

ஓமந்தைக்கு மேற்கே குறிப்பாக மடுவுக்கு மேற்கே இருக் கின்ற பகுதிகளில் மற்றும் மன்னார் கட்டுக்கரைக் குளத்துக்கு கிழக்கே இருக்கின்ற பகுதிகளில் இருந்து முன்னணிக் காவலரண் களுக்கு முன்பாக விடுதலைப் புலிகளின் நிலைகளைத் தாக்கி யழிக்கும் நடவடிக்கையில் இலங்கைப் படையினர் ஈடுபட்டுள் ளனர் - என்றும் அவர் கூறினார்.

(அ-1)

## கண்ணீர் அஞ்சலி

வவுனியா மாவட்ட வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்
ப.இ.தியடோர் அவர்களின் தந்தை

### அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்

அவர்கள் 22.03.2007 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்தியரையடைந்து விட்டார். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அவரது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

2001A ரிவு தாதிய உத்தியோகத்தர்கள்,
யாழ். போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்.

(58995)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### நாகன் வயிரமுத்து

(ஓய்வுபெற்ற விவசாயி, பொருளாளர் அம்பாள் சனசமூக நிலையம்)

தோற்றம் 15-01-1944 மறைவு 22.02.2007

எங்கள் குடும்ப விளக்கு அணைந்ததோ இல்லை இல்லை எங்கள் இதயங்களில் ஒளிவிட்டு எரிந்து கொண்டு இருக்கிறது.

எங்கள் ஊரின் வேங்கை ஆலமரம்சாந்ததோ இல்லை இல்லை
ஆலமரத்தின் விழுதுகள் போல் நிமிர்ந்து நிற்கின்றது.
எங்கள் தெய்வத்தை காலன் கடத்தி 31 ஆம் நாள் கடந்தாலும் எங்கள் இதயங்களில் இன்றும் என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கிறது.

இன்று(24.03.2007)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்துஇடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றோம்.

பச்சந்தை, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். மனைவி, பிள்ளைகள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு - 2006/2007

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவு கள்பரீட்சைகள் அலகில் 2006/2007 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 29.06.2007வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**குறிப்பு:** மேற்படி திகதிக்குப்பின் கிடைக்கப்பெறும் விண்ணப் பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன் மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி-1 கற்கை நெறிக்குப்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண் கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டணவிவரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப்படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதி முறைகளும் (முதற்கலை/முதல் வர்த்தக நெறிக்கானது) | 250.00 |

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங் கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்திய மைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20.00 பெறுமதி யுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ.மீஅளவுடைய தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சை கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முக வரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்.**
**20.03.2007**

(சி/50856)

## எமது எல்லையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகப் பரிசீலித்து வருகின்றது - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க மறுத்துள்ளார்.

### அச்சுறுத்தல் வரும்போது எதனையும் பார்க்கமுடியாது

அச்சுறுத்தல் ஏற்படும்போது விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, அரசின்கட்டுப்பாட்டுப்பகுதி என்று பார்க்க முடியாது; வேறுபாடும் இருக்காது.

எமது இலக்கு மீது ஒருவர் தாக்குதல் நடத்தும்போது அதை அழித்தாக வேண் டும். அதைத்தான் படையினர் செய்கின்றனர்.

எவ்வளவு தூரம் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவினோம் என்பது பிரச்சினையல்ல. புலிகள் எமது பகுதிக்கு வந்து தாக்குதலை நடத்தினார்கள் - என்றார். (அ-1)

## கடத்தப்பட்டவர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பானவர் களைக் கைதுசெய்யுமாறும், காணாமற் போயுள்ளவர்களைத் தேடிக்கண்டறியு மாறும் கோரியே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்படவிருப்பதாக காணாமற்போனோரைத் தேடிக் கண்டறி யும் குழு தெரிவித்துள்ளது. (சி)

## ஆனைக்கோட்டையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்தே இந்த ஆயுதங்கள் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப் படுகின்றது. மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

மைக்ரோ பிஸ்டல் - 01, ஆர்.பி.ஜி. ஷெல் 01, 9 மில்லிமீற்றர் ரவைகள் - 25, பற்றரி -01, மகசின்01, தொலைத்தொடர்புக் கருவி - 2, இவற்றுடன் 66 போத்தல் திரவ மருந்துகள், 25 போத்தல் சேலைன் மற் றும் 118 ஊசிமருந்துகள் என்பனவும் மீட் கப்பட்டுள்ளன. (சி)

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பல அதிகாரிகள் சென்றிருந்தனர்.

வாகரைப் பிரதேசத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயும்நோக்கில் சென்ற இக்குழுவினர் அப்பிரதேசத்தில் குடியமர்ந்துள்ள 3,500 குடும்பங்களுக்கு ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப் பொருள்களை எடுத்துச் சென்றனர் என் றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஏ-9 போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப் பட்டதை அடுத்து அங்கு போக்குவரத்தைக் கண்காணித்து வந்த செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவினர் தமது கொடியை அங்கி ருந்து அகற்றிவிட்டு வவுனியா திரும்பினர் என்று கூறப்படுகிறது. புளியங்குளம், சேம மடு, பாலமோட்டை ஆகிய கிராமங்கள் மீது நேற்றும் காலை முதல் ஷெல் வீச்சு நடத் தப்பட்டது. வவுனியாவில் இருந்து ஓமந்தை ஊடாக வன்னிப் பகுதிக்குச் செல்லக் காத் திருந்த பயணிகள் இந்த ஷெல் தாக்குதலால் பெரும் அவலங்களை அனுபவித் தனர்.

இதேவேளை - வவுனியா முன்னரங்கப் பகுதியில் அரசுப்படைகள் நடத்திய தாக்கு தலில் விடுத லைப் புலிகள் 11பேர் கொல்லப் பட்டிருக் கின்றனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் நிலையம் தெரிவித்திருக்கிறது.

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் இடம் பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல்களி லேயே 11 புலிகளை அரசுப்படைகள் கொன்றனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

ஓமந்தையில் முன்னரங்க நிலைகளுக் குச் சமீபமாக இரண்டு மோட்டார் சைக்கிள்களை அவதானித்த படையினர் அவற்றின் மீது தாக்குதல் நடத்தினர். இதில் விடு தலைப் புலிகள் நால்வர் உயிரிழந்தனர். மற்றொரு சம்பவத்தில் உழவு இயந்திரம் ஒன்றின் மீது படையினர் நடத் திய தாக்குத லில் புலிகள் ஏழுபேர்வரை கொல்லப்பட்டனர் என்று பாது காப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. இந்த சம்பவங்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரியவர வில்லை.

## மடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரியபண்டி விரிச்சான் கிராமத்தில் உள்ள மத்திய மருந்தகக்கட்டடத்துக்கு அருகிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று கூறப் படுகிறது.

மடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் காவலாளியான ஜோசப் மனுவேல்பிள்ளை (வயது 51) என்பவரே ஷெல்வீச்சில் சிக்கி உயிரிழந்தார்.

பிரமணாளங்குளம் மற்றும் மடு வீதிச் சந்தி ஆகிய இடங்களில் அமைந்துள்ள படைமுகாம்களில் இருந்தே பெரியபண்டி விரிச்சான் நோக்கி இந்தப் பல்குழல் பீரங் கித் தாக்குதல்களும், ஆட்லறி தாக்குதல் களும் நடத்தப்படுகின்றன என்று கூறப்படு கின்றது. (அ-சி)

Mobile@net Computer Services
BIT
யாழ் மாவட்டத்தில் Bit கற்கை நெறியைப் பயிலும் மாணவர்கள் அனைவரும் 25.03.2007 ஞாயிறு காலை 10.30க்கு MCS நிறுவனத்தில் தவறாது சமூகமளிக்கவும்.
MCS 324, பலாலி வீதி, (ஆலடிச் சந்தியருகே), யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி குடமியன் வரணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட எமது நண்பர்களான பார்த்திபன் (கோபி), இராஜசேகரன்(கரன்) ஆகியோரின் பாசமிகு சகோதரர்

### தர்மரத்தினம் உதயசங்கர் (சங்கர்)

அவர்களின் அகால மரணத்தையிட்டு அவர்களின் நண்பர்களா கிய நாம் மனம் உடைந்து வருந்துகிறோம்.

அன்னாரின் பிரிவால் துடிதுடிக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத் தையும் ஆறு தலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
நண்பர்கள்(வரணி).

## மரண அறிவித்தல்கள்

### கதிரன்.உதயயொகிதா (யொகி)

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட கதிரன் உதயயொகிதாவின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் ஐவினைப்பிட்டி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

### தியாகராசா முருகையா



கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மேற்கு ஜேர்மனியை வசிப்பிடமாகவும்கொண்ட தியாகராசா முருகையா 20.03.2007 செவ் வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கொக்குவில்கிழக்கு ரெயில் றோட்டைச்சேர்ந்தசுப்பையா தியாகராச - பூமணி (கனடா), காலஞ்சென்ற அன்னபூரணம் தம்ப தியரின் அன்புமகனும் வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற நமசிவாயம் - அருளம்மா தம்பதியரின் மரு மகனும் சிவலட்சுமியின்(ஜேர்மனி) அன்புக் கணவரும் பால முரு கன் (ஜேர்மனி), சுகன்ஜா (ஜேர்மனி), சர்மிலன் (ஜேர்மனி), யதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2007 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

Mrs.S.Murugiah
Katz Bach-STR 17
10965
Barlin W.Germany. 00493049800539

(59003)

தகவல்:
தி.பாலகுமார்(சகோதரன்),
ரெயில் றோட்,
கொக்குவில்.

### நடராசா கனகசபாபதி (செவ்வந்தி)

[உரிமையாளர், ராஜா பேக்கரி, செல்வம் பேக்கரி]



கரவெட்டி கிழக்கு செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் நெல்லிடி, வதிரியை வதி விடமாகவும் கொண்ட நடராசா கனக சபாபதி (செவ்வந்தி, உரிமையாளர் ராஜா பேக்கரி, செல் லம் பேக்கரி) அவர்கள் 22.03.2007 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - வள் ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் செல்லம்மா வின் அன்புக் கணவரும் மணிவண்ணன் (லண் டன்), மணிவதனி, மதிசூடி(லண்டன்), மதியழகன் (லண்டன்) ஆகி யோரின் அன்புத் தந்தையும் விஜிதா(லண்டன்), வல்லிபுரநாதன் (ஹாட்லிக் கல்லூரி), புஸ்பமலர்(லண்டன்), தர்சினி(லண்டன்) ஆகி யோரின் மாமனும் பகவதி, இராமசாமி (தியாகு), பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும் சஜித், சஞ்சேய், பிரியங்கா, சுஜீவன், திருபரன், ஸங்கீர்த்தனா, அரண், சேயன், தரணி, அருண் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்ற(23.03.2007) வெள்ளிக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் இடம்பெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ராஜா பேக்கரி'
வதிரி, கரவெட்டி

(59002)

தகவல்:
குடும்பத்தினர்.

### தர்மரட்ணம் உதயசங்கர் (சங்கர்)

குடமியன், வரணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தர்மரட்ணம் உதயசங்கர் நேற்றுமுன்தினம்(22.03.2007) அகாலமரணமானார்.

அன்னார் தர்மரட்ணம் - இராசமணி தம்பதியரின் அன்பு மக னும் பார்த்தீபன், இராசசேகரன், கிரிகரன், எழிலரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2007) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன், வரணி.

(சி/50855)

தகவல்:
குடும்பத்தினர்.

### அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற வரி மதிப்பாளர்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 100/3, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமா கவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம் மானுவேல் 22.03.2007 வியாழக்கிழமை கால மானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.03.2007) சனிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சில் லாலை சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100/3, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.
0779773108 , 0779184650, 077 6151026

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org